1987 நவம்பர் 10]

மத்தாளப்பள்ளம் அணை கட்டும் திட்டம்.

26—(*வினா எண் 9628) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் வட்டத்தில் நெருப்பூர் அருகே மத்தாளபள்ளம் அணைக்கட்டும் திட்டம் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இத்திட்டத்திற்கு அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். சுமார் ஐந்து, ஆறு ஆண்டுகளாக அதிகாரிகளால் சர்வே நடத்தப்பட்டும் இன்னும் அந்தத் திட்டம் துவங்கப்படாமல் இருக்கிறது. பெண்ணாகரம் வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டமாகும். அந்தப் பகுதியிலே இந்த மத்தாளபள்ளம் அணை கட்டுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆய்வு செய்யும் என்று சொல்கிற நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்குத் தண்ணீர் வரத்து எவ்வளவு வருகிறது என்பதையெல்லாம் சரிபார்த்துத்தான் அதற்கு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வை நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். விரைவாக ஆய்வுப் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வைகை அணையின் கொள்ளளவை அதிகரித்தல்.

27—(*வினா எண் 11068) திரு. கே. உச்சி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணையின் தற்போதைய கொள்ளளவு எவ்வளவு?